# தமிழ் வருடாந்திர மாநாடு

# மெதடிஸ்ட் பெண்கள்

## கருப்பொருள்: அவரை அறியவும் அவரை அறிவிக்கவும்

---

*கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரிகளே,*

*ஆண்டவரும், ரட்சகருமான யேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் ,*

*சார்பாக மெதடிஸ்ட் பெண்கள் ஞாயிறு வாழ்த்துக்களை கூறுகிறேன்.*

*இந்த வருடத்துக்கான நமது கருப்பொருள் "ஆண்டவருடைய மகிமையைத் தேடுவது". இதை அடிப்படயாக கொண்டு ஒவ்வொரு பெண்களும்- தாயாக, மனைவியாக, சகோதரிகளாக, மகளாக.... நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திலேயும ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு மகிமை கொண்டு வரும்படி அவரைத் தேட வேண்டும். நம்மையே சார்ந்திராது, நம்முடைய சகல ஆராதனைகளுக்கும் பாத்திராகிய நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் நோக்கமாகி, நாம் தியாகமுள்ள வாழ்வு வாழ இக்கருப்பொருள் நம்மை உற்சாகப்படுதுகிறது.*

*வருகிற இந்த MW வாரம் முழுவதும் மெத்தடிஸ்ட் பெண்களாகிய நாம் அநேக ஊழியங்களையும் / நிகழ்ச்சிகளையும் (எடுத்துக்காட்டாக: வீடு சந்திப்பு, வெளிப்புற நற்செய்தி கூட்டங்கள், ஜெபம், ....) நம்முடைய சபைகளிலே நடத்தி வார இறுதியில் வருகிற 21-மே-2107 ஞாயிறை முத்தாய்ப்பான மெத்தடிஸ்ட் பெண்கள் ஞாயிறாக முடிக்க வேண்டுமென்பதே என்னுடயை ஜெபமும் வேண்டுதலுமாய் இருக்கிறது. இந்த MW ஞாயிறன்றுள்ள நம்முடைய சபை ஆராதனையை, பெண்கள் முழுப் பொறுப்பெடுத்து நடத்தும்படியும், கூடுமானால் பெண் ஊழியர்களை செய்தி கொடுக்க உபயோக்கிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நாளிலே MW தலைவி அறிக்கை சமர்ப்பிக்கும்படிக்கும், அந்த அறிக்கையில் நாம் செய்கிற ஊழியங்களைக்குறித்தும் ஸ்தல சபை & TAC. ஊழியங்களை நம்முடைய குழுவினர் எவ்வாறு இணைந்து கட்டுகிறார்கள் என்பதைக்குறித்தும் சொல்லும்படியும் வேண்டுகிறேன்,*

*இந்த வருடம் நம்முடைய மெத்தடிஸ்ட் பெண்கள் ஞாயிறு எடுக்கும் காணிக்கையை நமது ஸ்தல சபையே வைத்துக்கொண்டு , அதிலிருந்து நமது பெண்கள் ஊழியத்திற்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்று TAC மாநாடு முடிவு செய்துள்ளது. எனவே இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாம் இருக்கும் சபையோடு சேர்ந்து நமது பெண்களும், நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து ஒரே சிந்தையோடு ஆண்டவருடைய நாமத்துக்கு மகிமையைத் தருவோம்.*

*ஒவ்வொரு சபைகளில் உள்ள MW கிளைகளுக்கும், அதின் ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் எனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆசீர்வாத்தைதயும், வாழ்த்துதலையும் கூறிக் கொள்கிறேன். MW ஞாயிறு ஆராதனை, மற்றும் அந்த வாரத்தின் கொண்டாட்டங்களையும் தெரிந்து கொள்ள மிகவும் ஆர்வமாக உள்ளேன். எனவே, அது சம்மந்தப்பட்ட படங்களையும், கருத்துக்களையும் உங்களது மாகாண தலைவி மூலமாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.*

*நீதிமொழிகள் 31:30*

*சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரியே புகழப்படுவாள்.*

*ஆசீர்வாதமான பெண்கள் ஞாயிறு!!*

***திருமதி.கனி ஜெயபால்***
***தலைவி***
***TAC- மெதடிஸ்ட் பெண்கள்.***